NVQ சுற்றறிக்கை /2020

**மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு**

**வலது குறைந்த மாணவர்களின் NVQ மதிப்பீடுகளில் நியாயமான சீராக்கல்கள்**

இலங்கையில் உள்ள பாதிப்புறும் ஏதுநிலை கொண்ட மக்களுக்கான தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி தேசியக் கொள்கை அத்துடன் TVET ஏற்பாடுகள் மீதான தேசிய மூலோபாயம் என்பவற்றில் வலது குறைந்த நபர்கள் பாதிப்புறும் ஏதுநிலை மிக்க மற்றும் பிரதிகூலக் குழுக்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் திறன்களின் பயிற்சி மீதான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் காரணமாக வேலைக்கமர்த்தப்படும் இயலுமை என்ற நோக்குப்புள்ளியில் அவர்கள் கொண்டுள்ள பாதிப்புறும் ஏதுநிலை அடிப்படையில், TVET முறைமையின் உடனடியான கவனத்துக்குரிய தேவை கொண்டவர்களாக அவர்கள் உள்ளனர். வலது குறைந்த நபர்கள் NVQ பயிற்சி நெறிகளில் சேர்த்திணைக்கப்படல் மட்டுப்படுத்தப்பட்டதாக, நியாயமான சீராக்கல் அற்றதாகவே காணப்படுகின்றது, வலது குறைந்த நபர்களின் திறன்கள் சான்றிதழளிக்கப்படுவதற்காக தகுந்த முறையில் மதிப்பீடு செய்யப்படும் பிரயோகத்தினை பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர். வலது குறைந்த நபர்கள் ஒரே இயல்பான குழுவாக அமையாததால் அவர்கள் தமது இயலாமைகளாலன்றி இயலுமைகளாலேயே தீர்மானிக்கப்பட வேண்டும்.

ஏற்றங்கீகாரம் பெற்ற தேசிய தொழிற்கல்வி தகுதிகளை வழங்கக் கூடிய பாடநெறிகளை நடத்தும் பதிவு செய்யப்பட்ட பயிற்சி வழங்குனர்கள் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணைய அடிப்படையான தகவல் முறைமையில் மாணவர் தொகுதி உள்ளடக்கலை மேற்கொள்ளும் நேரத்தில் வலது குறைந்த மாணவர்கள், எவராவது இருப்பின், அந்த வலது குறைவின் தன்மை மற்றும் வகையினை சுட்டிக்காட்டுவது இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றது. வழங்குனர்கள், மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தில் உள்ள *இணைப்பு I – "வலது குறைந்தோர் தகவல் பதிவுப் படிவத்தை"* வலது குறைவு பற்றிய தகவல்களை பதிவு செய்யப் பயன்படுத்துவதுடன் அதனை மதிப்பீட்டாளர்கள் மற்றும் ஏனைய கரிசனை மிக்கவர்களின் உசாத்துணைக்காக பயிற்சி நிலையத்தில் கிடைக்கச் செய்ய வேண்டும். வழங்குனர்கள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் இருந்து *இணைப்பு II – "நியாயமான சீராக்கல் அமுல்படுத்தல் - ஒப்புக்கோடல் படிவத்தை"* தரவிறக்கம் செய்து இறுதி மதிப்பீட்டின் போது மதிப்பீட்டாளர்கள் நிரப்பி சமர்ப்பிப்பதற்காக அவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்ட மதிப்பீட்டாளர்கள் இச்சுற்றுநிருபத்தின் தேவைகளை ஒக்டோபர் 1, 2020 ஆம் திகதி முதல் பின்பற்றியொழுகுவதற்கு இத்தால் அறிவுறுத்தப்படுகின்றனர். வலது குறைந்த மாணவர்கள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டால் மதிப்பீட்டாளர் முன்னதான மதிப்பீட்டின் பொழுது நிலையத்தில் காணப்படும் "*வலது குறைந்தோர் தகவல் பதிவுப் படிவத்தை*" தேவை நோக்கீடு செய்ய வேண்டும். இறுதி மதிப்பீடு நிறைவு செய்யப்பட்டவுடன் மதிப்பீட்டாளர்கள் உரிய முறையில் நிரப்பப்பட்ட *"நியாயமான சீராக்கல் அமுல்படுத்தல் - ஒப்புக்கோடல் படிவத்தை"* ஏனைய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

குறிப்பாக, மதிப்பீட்டாளர்கள், பயிற்சி வழங்குனர்கள் மற்றும் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழு என்பன பின்வரும் செயற்பாடுகளைப் பின்பற்றியொழுக வேண்டும்;



02/10/2020

S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
APPROVED BY THE MINISTRY OF JUSTICE
27, MMV BACK ROAD, KATTANKUDY- 06

1. **அறிவு மதிப்பீட்டுக்கு மேற்கொள்ளப்படக்கூடிய நியாயமான சீராக்கல்கள்:**

   i. எழுத்துப் பரீட்சைக்குப் பதிலாக வாய்மொழி மூலமான மதிப்பீடு*
   ii. மதிப்பீட்டை பூர்த்தி செய்வதற்கு குறைந்த பட்சம் 25% ஆன மேலதிக நேரம் வழங்குதல்
   iii. எழுதுனர்/வாசிப்பவர்/சைகை மொழி உரைபெயர்ப்பாளர்/ பயிற்றுனர் ஒருவரின் உதவி
   iv. மாற்று வடிவங்களில் வினாத்தாள் வழங்கப்படல்
   v. உதவித் தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு அல்லது/அத்துடன் எழுதுவதற்கான உதவிகள்
   vi. மதிப்பீடு நடைபெறும் இடத்துக்கான பௌதீக அணுகும் வசதி அல்லது வேறான இடம்
   vii. மேற்பார்வையுடனான ஓய்வு இடைவேளைகள் (ஒவ்வொரு 40 நிமிடங்களுக்கும் 10 நிமிட இடைவேளை)
   viii. கேள்விகள் எளிமையான மற்றும் இலகுவான மொழிநடையில் உருவாக்கப்பட்டிருத்தல் (அறிவாற்றல் வலது குறைந்த நபர்களுக்காக), பார்வை உள்ளீடுகள் அவசியமான கேள்விகளுக்குப் பகரமாக மாற்றீடான கேள்விகளை வழங்குதல் (பார்வைக்குறைபாடுடைய நபர்களுக்காக), அல்லது விபரிக்கின்ற கேள்விகள் (கேட்டல் குறைபாடு கொண்ட நபர்களுக்காக).

**வலது குறைந்த நபர்கள் தமது நடமாடும் குறைபாடு அல்லது அத்துடன் சிறுபராயத்தில் கல்விக்கான குறைக்கப்பட்ட அணுகல் காரணமாக எழுதுவதற்கு அல்லது தட்டச்சு செய்வதற்கு இயலாத நிலையில் காணப்படலாம் அத்துடன், தமது விடைகளை வாய்மொழி மூலமாக அல்லது வாசிப்பவர்/எழுதுபவர் ஒருவரின் ஊடாக வழங்க வேண்டிய நிலையில் காணப்படலாம். எழுதும் திறன்கள் பணியின் சாரத்தை அல்லது தகுதி தரநிலையினை பாதிக்காத நிலையில் இது ஒரு நியாயமான சீராக்கலாக அமைகின்றது. <u>வலது குறைந்த நபர் ஒருவர் தேசிய தகுதித் தர நியமங்களை அடைவதற்காக தொடர் மதிப்பீட்டுக்கு அதிக பெறுமதி வழங்கப்படலாம்.</u>*

2. **செயன்முறைப் (இறுதி) பரீட்சைக்கு மேற்கொள்ளபடக்கூடிய நியாயமான சீராக்கல்கள்:**

   i. மதிப்பீடு நடைபெறும் இடத்துக்கான பௌதீக அணுகும் வசதி
   ii. மதிப்பீட்டை பூர்த்தி செய்வதற்கு குறைந்த பட்சம் 25% ஆன மேலதிக நேரம் வழங்குதல்
   iii. செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு வேறுபட்ட தொடர்பாடல் முறைகளைப் பயன்படுத்துதல்: சைகை மொழி, உதட்டு வாசிப்பு, எழுதப்பட்ட குறிப்புகள், பார்க்கக்கூடிய குறியீடுகள், உடல் மொழி (கண் தொடர்பு, முகப் பாவனைகள், கைகளால் காண்பித்தல்), தெளிவான மற்றும் இலகுவான மொழிப் பயன்பாடு, வர்ணக் குறியீடுகளின் ஒப்பு நோக்கு, போன்றன.
   iv. உதவித் தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடு அல்லது.·.அத்துடன் செயற்பாடுகளை மேற்கொள்ள ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்ட கருவிகள்
   v. செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பாரம்பரியமற்ற/வேறுபட்ட முறைகளைப் பயன்படுத்தல்
   vi. பரிச்சியமான நிலைகளில் மதிப்பீடு மேற்கொள்ளப்படுவதற்கு அனுமதித்தல் (உதாரணமாக, பயிற்சியின் போது பயன்படுத்தப்பட்ட கருவிகள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தல்)

நியாயமான சீராக்கல்கள் வலது குறைவு வகை ஒன்றுக்கான பொதுவின எதிர்வினையாக அமையாமல் அவை வலது குறைந்த தனிநபர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வனவாக அமைந்திருக்க வேண்டும்.



S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
02/10/2020

மதிப்பீடு ஒன்றின் பொழுது வலது குறைந்த நபருக்கு சரியானவையாக அமைபவை அதே வகையான வலது குறைந்த இன்னொரு நபருக்கு சரியானவையாக அமையும் என ஊகிக்கப்படலாகாது.

NVQ மதிப்பீட்டாளர்களுக்கு உதவுவதற்காக மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள *இணைப்பு III – வலது குறைந்தோர் உள்ளடக்கல் கருவித் தொகுதி* வலது குறைவின் வகைக்கேற்ப மேற்கொள்ளப்படக்கூடிய நியாயமான சீராக்கல்கள் பற்றிய தகவல்களை வழங்குகின்றது; அங்கு வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் சுற்றுலா தொடர்பான பயிற்சி நெறிகளில் இருந்து பெறப்பட்ட உதாரணங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன. இந்த உதாரணங்கள் எந்த ஒரு NVQ பாடநெறிக்கும் வலது குறைந்த பயிற்சி பெறுனர்களின் தேவைகளுக்கு இடமளிப்பதற்காக பொதுமையாக்கம் செய்யப்பட்டு பிரயோகிக்கப்படலாம்.

### 3. நியாயமான சீராக்கல்கள் பற்றி NVQ மதிப்பீட்டாளர்களுக்கு பயிற்சியளித்தல்:

மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு மற்றும் UNIVOTEC என்பன வேறுபட்ட வகைகளில் அமைந்த வலது குறைந்த நபர்களுக்கு தேவையான நியாயமான சீராக்கல்கள் பற்றிய பயிற்சியினை மதிப்பீட்டாளர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளன. வலது குறைந்தோர் உள்ளடக்கல் பயிற்சியினைப் பெற்றுக்கொண்ட மதிப்பீட்டாளர்கள் ஒவ்வொருவரும் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தினால் பேணப்படும் மதிப்பீட்டாளர்களின் தரவுத்தளத்தில் அவ்வாறான பயிற்சியை நிறைவு செய்த மதிப்பீட்டாளர் என அவரது பெயருக்கு எதிரே சுட்டிக்காட்டப்படுவர்.

### 4. NVQ மதிப்பீட்டாளர்களின் நியமனம்:

வலது குறைந்த பயிற்சி பெறுனர்களின் மதிப்பீட்டுக்காக, தொடர்புடைய பயிற்சி வழங்குனர் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் தன்னியக்க காலமுறைப்படுத்தல் முறைமையின் ஊடாக மதிப்பீட்டுக்கான கோரிக்கையை சமர்ப்பிக்க முடியும். அதன் பின்னர் மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு மதிப்பீட்டாளர்களை நியமிப்பதுடன் மதிப்பீட்டாளர் நியமனக் கடிதங்கள் 2 மதிப்பீட்டாளர்கள் கொண்ட குழாமிற்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும். வலது குறைந்த மாணவர்கள், மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருந்தால் விசேட மதிப்பீட்டாளர் நியமனக் கடிதம் ஒன்று வழங்கப்படும்.

### 5. நியாயமான சீராக்கல்களுக்கான கோரிக்கை:

தொழிற் பயிற்சி நிலையம் (VTC) ஒன்று பாடநெறி ஒன்று ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் இணையவழி முறைமைக்கு மாணவர்களின் பட்டியலினைப் பதிவேற்றம் செய்யும் பொழுது வலது குறைந்த மாணவர்கள், எவராவது காணப்படின், அவர்கள் வலது குறைந்தோர் என்ற பிரிவில் சுட்டிக்காட்டப்பட வேண்டும். தொழிற் பயிற்சி நிலையங்கள் வலது குறைவுக்கு ஆதாரமாக பொருத்தமான ஆவணங்களை பேணுவதுடன் அவற்றைக் மதிப்பீட்டாளர்கள் மற்றும் ஏனைய கரிசனை கொண்டோர் தேவை நோக்கு செய்வதற்காக கிடைக்கச் செய்ய வேண்டும் (உதாரணமாக, வலது குறைந்தோர் சான்றிதழ், மருத்துவ அறிக்கை, குறித்த நபர் அரசிடம் இருந்து வலது குறைந்தவர்களுக்கான கொடுப்பனவைப் பெறுவதைக் காண்பிக்கும் ஆவணம்).

NVQ பாடநெறி ஒன்று மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நடத்தப்படும் எழுத்துப்பரீட்சை / அரையாண்டுப் பரீட்சை ஒன்றை ஒன்றுகூட்டப்படும் மதிப்பீடாகக் கொண்டிருக்குமாயின் தொடர்புடைய



S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
02/10/2020

தொழிற்கல்வி நிலையம் / நிறுவனம் அப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்களை மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் மதிப்பீட்டுப் பிரிவுக்கு உரிய திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும். வலது குறைந்த பயிற்சி பெறுனர்கள் இருப்பார்களாயின், "நியாயமான சீராக்கலுக்கான" கோரிக்கை வலது குறைவின் வகையைக் குறிப்பிட்டு தொழிற் பயிற்சி நிலையம் / நிறுவனத்தினால் அவ்வாறான ஒவ்வொரு பயிற்சி பெறுனருக்கும் மதிப்பீட்டுப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**6. முன்னரான மதிப்பீட்டுக்கான விஜயம்:**

(அ) வலது குறைவுக்கான ஆதாரமாக செயற்படும் ஆவணத்தின் மூலப்பிரதி NVQ மதிப்பீட்டாளர்களுக்கு அளிக்கை செய்யப்பட வேண்டும். தொழிற் பயிற்நி நிலையத்தில் காணப்படும் *வலது குறைந்தோர் தகவல் பதிவுப் படிவம்* தகவலுக்காக தேவை நோக்கு செய்யப்பட வேண்டும்.

(ஆ) NVQ மதிப்பீட்டாளர்கள் தொழிற் பயிற்சி நிலையத்தின் உரிய பணியாளர் மற்றும் வலது குறைந்த பயிற்சி பெறுனர் ஆகியோருடன் மதிப்பீட்டின் பொழுது மேற்கொள்ளப்பட வேண்டிய பொருத்தமான நியாயமான சீராக்கல் நடவடிக்கைகள் பற்றி கலந்துரையாடி உறுதி செய்வர்.

**7. ஒன்று கூட்டப்பட்ட / இறுதி எழுத்துப் பரீட்சை மற்றும் தகுதியுடைமை அடிப்படையான மதிப்பீடுகளின் போது நியாயமான சீராக்கல்களுக்கான ஏற்பாடுகள்:**

(அ) எழுத்துப் பரீட்சைகளின் போது பரீட்சை நிலையத்ததில் மேற்பார்வையாளர் / மதிப்பீட்டாளரினால் அல்லது மேற்பார்வையாளர் / மதிப்பீட்டாளர் நியமிக்கும் நபரினால் சீராக்கல்கள் ஏற்பாடுகள் ஒவ்வொரு வலது குறைந்த நபரினதும் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டு பிரயோகிக்கப்படுவதை மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு உறுதி செய்யும்.

(ஆ) NVQ மதிப்பீட்டாளர்கள் தகுதியுடைமை அடிப்படையான மதிப்பீடுகளை மேற்கொள்ளும் வேளை (அறிவு மற்றும் நடைமுறை திறன்கள் ஆகிய இரண்டுக்கும்) நியாயமான சீராக்கல்கள் வழங்கப்படுவதை தொழிற் பயிற்சி நிலையங்கள் / நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும்.

(இ) NVQ மதிப்பீட்டாளர்கள் இறுதி மதிப்பீடு செய்யும் தினத்தில் *"நியாயமான சீராக்கல் அமுல்படுத்தல் - ஒப்புக்கோடல் படிவத்தை"* பூர்த்தி செய்து அதனை மதிப்பீட்டுப் பதிவுகள் மற்றும் ஏனைய தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் இணைத்து தொழிற் பயிற்சி நிலையத்தின் ஊடாக மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

வலது குறைந்த பயிற்றுனர்களின் மதிப்பீட்டின் பொழுது அமுல்படுத்தப்படும் நியாயமான சீராக்கல்கள் பற்றிய அவ்வாறான தரவுகளை மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு பெற்றுக்கொள்ளும் போது அவை தீர்மானங்களை மேற்கொள்ளும் பொழுது அல்லது/அத்துடன் TVET முறைமையில் வலது குறைந்தோர் உள்ளடக்கல் தொடர்பான கொள்ளை உருவாக்கம் அல்லது/அத்துடன் மீளாய்வு என்பன மேற்கொள்ளப்படும் வேளை பயன் மிக்க தகவல்களாக அமையும்.

இச்சுற்றறிக்கையானது ஒக்டோபர் 01, 2020 ஆம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது.

**ஜானக ஜெயலத்**
பணிப்பாளர் நாயகம் (பதில்)
மூன்றாம் நிலைத் தொழிற்கல்வி ஆணைக்குழு



S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
APPROVED BY THE MINISTRY OF JUSTICE

02/10/2020

இணைப்பு 1: வலது குறைந்தோர் தகவல் பதிவுப் படிவம்

| | |
|---|---|
| **பயிற்சி பெறுனரின் பெயர்:**<br><br>**தேசிய அடையாள அட்டை இலக்கம்:** | **வலது குறைவின் வகை:** ❐கேட்டல் ❐பார்வை ❐நடமாடல் ❐அறிவாற்றல் ❐சுய பராமரிப்பு ❐தொடர்பாடல்<br>❐ ஏனையவை (*தயவு செய்து குறிப்பிடவும்*):__________ |
| **பாடநெறியின் பெயர் மற்றும் அதன் NVQ மட்டம்:** | **பயிற்சி வழங்குனரின் பெயர் மற்றும் தொடர்புத் தகவல்கள்:** |

| |
|---|
| **அ. அறிவு மதிப்பீடு – நியாயமான சீராக்கல் கோரிக்கை** |
| நீங்கள் கோரும் சீராக்கல்(கள்) எவை: *முடிந்தளவு குறிப்பான வகையில் குறிப்பிடவும்.* |
| நீங்கள் மேற்கொள்வதற்கு சிரமப்படும் செயற்பாடு(கள்) எவை? கோரிக்கை விடுக்கப்படும் சீராக்கல்(கள்) எவ்வாறு உங்களுக்கு உதவும்? |
| **ஆ. செயன்முறை மதிப்பீடு நியாயமான சீராக்கல் கோரிக்கை** |
| நீங்கள் கோரும் சீராக்கல்(கள்) எவை: *முடிந்தளவு குறிப்பான வகையில் குறிப்பிடவும்.* |



02/10/2020

S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
APPROVED BY THE MINISTRY OF JUSTICE

| |
|---|
| |
| நீங்கள் மேற்கொள்வதற்கு சிரமப்படும் செயற்பாடு(கள்) எவை? கோரிக்கை விடுக்கப்படும் சீராக்கல்(கள்) எவ்வாறு உங்களுக்கு உதவும்? |

| | |
|---|---|
| **இ. ஏனையவை** | |
| உங்களின் சீராக்கல் கோரிக்கை தொடர்பில் நடவடிக்கை எடுக்க உதவக்கூடிய ஏனைய தகவல்களை தயவு செய்து வழங்கவும்: *(உங்களின் வலது குறைவுக்கு சான்றாக பொருத்தமான ஆவணங்களை இணைக்கவும். உதாரணமாக, வலது குறைந்தோர் சான்றிதழ், மருத்துவ அறிக்கை, அரசாங்கத்திடம் இருந்து வலது குறைந்தோருக்கான கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும் நபர் என்பதைக் காண்பிக்கும் ஆவணம். மருத்துவ அதிகாரசபை ஒன்றினால் வழங்கப்படும் வலது குறைந்தோர் சான்றிதழ் நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்க)* | |
| **ஈ. கையொப்பங்கள்** | |
| பயிற்சி பெறுனர்: | திகதி: |
| பயிற்சி வழங்குனரின் பிரதிநிதி: | திகதி: |

**இணைப்பு 2: நியாயமான சீராக்கல் அமுல்படுத்தல் - ஒப்புக்கோடல் படிவம்**



02/10/2020

S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
MINISTRY OF JUSTICE

| | |
|---|---|
| **பயிற்சி பெறுனரின் பெயர்:**<br><br><br>**தேசிய அடையாள அட்டை இலக்கம்:** | **வலது குறைவின் வகை:** ❒கேட்டல் ❒பார்வை ❒நடமாடல் ❒அறிவாற்றல் ❒சுய பராமரிப்பு ❒தொடர்பாடல் ❒ ஏனையவை (*தயவு செய்து குறிப்பிடவும்*):____________ |
| **பாடநெறியின் பெயர் மற்றும் அதன் NVQ மட்டம்:** | **பயிற்சி வழங்குனரின் பெயர் மற்றும் தொடர்புத் தகவல்கள்:** |
| **NVQ மதிப்பீட்டாளரின் பெயர்:** | **NVQ மதிப்பீட்டாளரின் பதிவு இலக்கம்:** |

| |
|---|
| **அ. அறிவு மதிப்பீடு – வழங்கப்பட்ட நியாயமான சீராக்கல்(கள்)** |
| மதிப்பீட்டின் பொழுது பயிற்சி பெறுனருக்கு ஏதாவது சீராக்கல்களை வழங்கினீர்களா? ❒ஆம் ❒இல்லை<br>• இல்லை எனின், தயவு செய்து காரணத்தை விளக்கவும்.<br>• ஆம் எனின், என்ன சீராக்கல்(கள்) உங்களால் வழங்கப்பட்டன? |
| பயிற்சி பெறுனர் மேற்கொள்வதற்கு சிரமப்பட்ட செயற்பாடு(கள்) எவை? சீராக்கல்(கள்) எவ்வாறு பயிற்சி பெறுனருக்கு உதவியது? |
| **ஆ. செயன்முறை மதிப்பீடு - வழங்கப்பட்ட நியாயமான சீராக்கல்(கள்)** |
| மதிப்பீட்டின் பொழுது பயிற்சி பெறுனருக்கு ஏதாவது சீராக்கல்களை வழங்கினீர்களா? ❒ஆம் ❒இல்லை<br>• இல்லை எனின், தயவு செய்து காரணத்தை விளக்கவும்.<br>• ஆம் எனின், என்ன சீராக்கல்(கள்) உங்களால் வழங்கப்பட்டன? |
| பயிற்சி பெறுனர் மேற்கொள்வதற்கு சிரமப்பட்ட செயற்பாடு(கள்) எவை? சீராக்கல்(கள்) எவ்வாறு பயிற்சி பெறுனருக்கு உதவியது? |



S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
APPROVED BY THE MINISTRY OF JUSTICE
27, MMV BACK ROAD, KATTANKUDY- 06

02/10/2020

| |
|---|
| |
| **இ. ஏனையவை** |
| இப்படிவத்தில் நீங்கள் பதிவு செய்ய விரும்பும் தகவல்கள் எவையாவது இருப்பின் அவற்றை தயவு செய்து குறிப்பிடவும்: |
| **ஈ. கையொப்பங்கள்** |

| | |
|---|---|
| பயிற்சி பெறுனர்: | திகதி: |
| NVQ மதிப்பீட்டாளர்1: | திகதி: |
| NVQ மதிப்பீட்டாளர்2: | திகதி: |
| பயிற்சி வழங்குனரின் பிரதிநிதி: | திகதி: |

02/10/2020

S.M. ATHEEK Bsc (Agric)
SWORN TRANSLATOR
(ENGLISH/TAMIL)
APPROVED BY THE MINISTRY OF JUSTICE
27, MMV BACK ROAD, KATTANKUDY- 06